சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 26-ம் நாள் வியாழக்கிழமை

இடைமனு எண்.1/2025

இன்

அசல் வழக்கு எண்.378/2023

....

சப்பாணிமுத்து ...மனுதாரர் /8-ம் பிரதிவாதி

....எதிர்.....

1. மூக்கையா கோனார்
2. சந்திரசேகர்
3. மனோஜா
4. ஸ்ரீதேவி ...எதிர்மனுதார்கள்/வாதிகள்

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 16.02.2026-ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எஸ்.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எம்.மோகனசுந்தரம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**உத்தரவு**

இந்த மனுவுடன் தாக்கல் செய்த ஆவணங்களை மனுதாரர் தாக்கல் செய்யாததை மன்னித்து மனுதராரர் தரப்பு ஆவணங்களாக ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் கட்டளை 8, விதி 14(2) மற்றும் பிரிவு 151--ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

இத்துடன் தாக்கல் செய்த 1-வது ஆவணம் மனுதாரரின் தகப்பனார் பெயரில் உள்ள UDR பட்டா. மேற்படி ஆவணமும் மனுதாரரது வீட்டில் மனுதாரரது

தகப்பனாரின் பழைய பெட்டியில் இருந்ததில், மேற்படி ஆவணத்தை பல இடங்களில் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. அதனையும் தற்போது தான் தேடி எடுக்கப்பட்டது. இத்துடன் தாக்கல் செய்த 2 முதல் 6 ஆவணங்கள் "இ" சேவை மையம் மூலமாக கணினி மூலமாக தாவா வழக்கு விசாரணைக்கு வந்தபோது தேடி எடுக்கப்பட்டது. எனவே மேற்படி ஆவணங்களையும் எதிர்வழக்குரை தாக்கல் செய்த காலத்தில் தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டது. மேற்படி தவறும் தெய்வாதீனமாக ஏற்பட்டதே தவிர மனப்பூர்வமாக ஏற்பட்டதல்ல. எனவே இத்துடன் தாக்கல் ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, மேற்படி ஆவணங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. அவ்வாறு செய்யாவிடில் மனுதாரர் தரப்பிற்கு ஈடு செய்ய முடியாத கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடியதாக இருக்கிறது. எனவே மேற்படி மனுவை ஏற்று உத்தரவிடவேண்டும்.

3) <u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்.</u>

தாவா மனுவில் குறிப்பிட்டுள்ள 1 முதல் 6 ஆவணங்களின் அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் மேற்படி ஆவணங்களின் இணையதள நகல்களாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது சட்டப்படி ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. தாவா வழக்கில் மனுதாரர்/8ம் பிரதிவாதி மேற்படியாரின் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி கடந்த 3 வருடங்களாக தாவா முதலேற்பு வழக்கும் நிலுவையில் உள்ள நிலையில், தற்போது தாவா மனுவுடன் தாக்கல் செய்துள்ள மேற்படி 1 முதல் 6 ஆவணங்களும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. தாவா மனுவினை அனுமதித்தால் எதிர் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய இயலாத கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடும். மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி 1 முதல் 6 ஆவணங்களும் தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு பின்பு எதிர்மனுதாரரால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்பதால், அவைகளை சாட்சியமாக ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே தாவா மனுவினை 2ம் எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

6. மனுதாரர் தரப்பில் இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1-வது ஆவணம் மனுதாரரின் தகப்பனார் பெயரில் உள்ள UDR பட்டா என்றும், மேற்படி ஆவணமும் மனுதாரரது தகப்பனாரின் பழைய பெட்டியில் இருந்து தற்போது தான் தேடி எடுத்ததாகவும், 2 முதல் 6 ஆவணங்கள் "இ" சேவை மையம் மூலமாக கணினி மூலமாக தாவா வழக்கு விசாரணைக்கு வந்தபோது தேடி எடுக்கப்பட்டதாகவும், எனவே மேற்படி ஆவணங்களையும் எதிர்வழக்குரை தாக்கல் செய்த காலத்தில் தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதனை ஆட்சேபணை செய்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1 முதல் 6 ஆவணங்களின் அசல் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி 1 முதல் 6 ஆவணங்களும் தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு பின்பு எதிர்மனுதாரரால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

7) அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றதாக தெரிவித்துள்ள காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. ஏனெனில் 1வது ஆவணம் 1985-ம் வருடத்திய ஆவணமாக உள்ளது. மற்ற ஆவணங்கள் அனைத்தும் தற்போது "இ" சேவை மையம் மூலமாக எடுக்கப்பட்ட கணினி நகலாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் அனைத்து ஆவணங்களும் அசல் ஆவணங்கள் இல்லை என்றும் அவை அனைத்தும் தற்போது உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என தெரிவித்திருந்தாலும் அசல் வழக்கில் கோரப்பட்டுள்ள பரிகாரம் இருதரப்பு விசாரணைக்கு பின்பு தான் தீர்மானிக்க இயலும். மனுதாரர் மனுவை அனுமதித்தால் தான் அவரது வழக்கினை நிரூபணம் செய்ய இயலும். மனுதாரரின் மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடுவதாக தெரிவித்துள்ளார். எனவே வழக்கின் சங்கதிகளை கருத்தில் கொண்டு மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்த நீதிமன்றம் கருதுகிது.

முடிவாக தாவா மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 26-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PANDY R Digitally signed by PANDY R Date: 2026.02.26 17:29:31 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள்

தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம் - இல்லை.

PANDY R Digitally signed by PANDY R Date: 2026.02.26 17:29:38 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court,
Sivagangai
I.A.No.1/2025 in
O.S.No.378/2023
**Draft/Fair/Order**
26.02.2026